# குறள் நெறி

தமிழ் வாழ்க

மலர் 2 | திருவள்ளுவராண்டு 1996 வைகாசித்திங்கள் 2-ஆம் நாள் 15—5—65 | இதழ் 9

ஆசிரியர்:
டாக்டர்
சி. இலக்குவனார்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி

தமிழே உயிர்



சிறையில் செந்தமிழ்ச் செம்மல்

20 பக்கம் 25 காசு

கட்சிச் சார்பற்ற அரசியல் இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு

# தமிழனெங்கே? தமிழன் எங்கே?

**புதுவை நரசிம்மன்**

முறமெடுத்துப் புலியடித்த பெண்பெற்ற நாட்டில்
　　முடியெடுத்துப் படிதாண்டி அடிவைக்கும் இந்தித்
திறமொடித்து மறமுடித்து அறனெடுத்துச் செல்லும்
　　செந்தமிழன் எங்கே? தமிழ்க் குருதியோட்டம் எங்கே?
குறமாடி அறம்பாடித் திறம்பெற்ற நாட்டில்
　　கோலெடுத்துக் காலெடுத்து வைக்கும்பேய் இந்தி
மறனெழித்துக் கருத்தழித்துத் தமிழ்காக்கும் வீர
　　மங்கையர் பெற்றெடுத்த தமிழரெங்கே? எங்கே?

படையெடுத்துப் பகைமுடித்த மூவேந்தர் கூட்டம்
　　பறைசாற்றித் தமிழ்வளர்த்த நற்றமிழ்நா டெங்கே?
குடையெடுத்துத் தடையழித்துக் குருதிகொட்டி வீரர்
　　குற்றுயிரை நற்றமிழ்க்குக் கொடுத்ததமிழ் எங்கே?
உடைவாளால் படைபிளக்கும் தமிழ்க்கைகள் எங்கே?
　　உயிர்நாட்டைக் காத்திருந்த வயிரத்தோள் எங்கே?
மடைபிளந்த காட்டாறு போல்தமிழர் கூட்டம்
　　மந்திபோலும் இந்திபோக்க வருமிடமோ எங்கே?

நற்றமிழைப் பெற்றெடுத்த நற்றமிழ்த்தாய் போற்றும்
　　நன்றியுடன் வெற்றியுடை மறத்தமிழர் எங்கே?
புற்றிருந்த ஈசல்போல் போர்மறவர் கூட்டம்
　　போற்றிபோற்றித் தமிழ்நாட்டி வளர்த்தமனம் எங்கே?
கற்றிருந்தும் பற்றின்றிக் கிடக்கின்றான் இங்கே
　　கலந்துவிட்ட கூட்டத்தில் ஓர்தமிழன் எங்கே?
உற்றதாயும் தான்பெற்ற தமிழ்மொழியும் காக்க
　　உயிர்கொடுத்து உரமெடுத்து வருந்தமிழன் எங்கே?

காத்திருந்த நற்றமிழைக் காத்திருக்க வந்தேன்
　　காசினியில் என்றுகூறித் தமிழ்காத்து வாழும்
பூத்தவொரு பூவுலகில் தமிழனெங்கே? எங்கே?
　　போர்முகத்தில் புறங்கொடாத மறவர்கள் எங்கே?
பாத்திகட்டி நீர்பாய்ச்சும் உழவரெல்லாம் கூடிப்
　　படையெடுக்கும் இந்தியினை ஓட்டுமிடம் எங்கே?
காத்திருக்கும் தமிழ்காக்கும் இடமெங்கோ ஆங்கே
　　காலமெல்லாம் வாழ்பவன்தான் தமிழனவான் இன்றே.

[15—4—65 இதழ்த்தொடர்ச்சி]

# கற்பும் பொற்பும்

## புலவர் திருமுதுகுன்றம்

அருவிப்புனலில் என்னோடு என்தோழியும் நீராடினாள். எதிர்பாராமல் திடீரென்று அருவிப்புனல் அவளை இழுத்துக்கொண்டு சென்றது. என் தோழி தன்னுடைய தாமரை மலர்போன்ற கைகளால், தாமரைமலர் போன்ற கண்களை மூடிக்கொண்டு, அஞ்சி அலறியபடியே அருவியொடு சென்றாள். அதுகண்டு சுரபுன்னை மலர்மாலையை மார்பில் அணிந்த இளங்காளை ஒருவன் அருள் உள்ளத்தோடு அருவியில் பாய்ந்து என் தோழியை மார்போடு அணைத்தபடியே தூக்கிக் கொணர்ந்து கரையில் விட்டான். அப்போது என் தோழியின் கொங்கைகள் அவனது மார்பைப் புணர்ந்தன. அதனால் என்தோழி செயற்கரிய செயலான பெய்யாத மழையையும் பெய்யவைக்கும் ஆற்றல் படைத்த கற்புடையவள் ஆனாள்'' என்பதே அப்பாடலின் பொருள்.

'' காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ
டொழுகலான்
நீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந்
தருளினான்
பூணாகம் உறத்தழீஇப் போதந்தான்
அகனகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால்
என்தோழி
அருமழை தரவேண்டின் தருகிற்கும்
பெருமையளே!
(குறிஞ்சிக்கலி)

என்பது பாடல். இக்கருத்துக்களை உணர மாட்டாத இக்காலத்து எளியமாந்தர் கன்னிப் பெண் ஒருத்தி சான்றோனை இளைஞன் ஒருவனை நேரியமுறையில் காதலித்துத் தொடர்பு கொள்ளினும் அவளைக் கற்புக்கெட்டவள் என்று ஏசுகின்றனர்; கன்னிப்பெண் ஒருத்தி கயவன் ஒருவனால் அவளுடைய ஒப்புதலின்றிப் புணரப்பட்டால் (இராக்கத மணம்) அவளது கன்னித்தன்மையே அழிக்கப்பட்டதுஎன்பதை உணராது அவள் கற்பழிக்கப்பட்டதாகச் சொல்லுகின்றனர். என்னே அவர்தம் அறியாமை.

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் கூடத் தான் எழுதிய பெருங்காப்பியமான மணிமேகலையில் கற்புப் பற்றிய ஒரு குழப்பமான செய்தியைக் கூறுகிறார். "விசாகை என்ற கன்னிப்பெண் தன் மாமன் மகனை தருமதத்தனோடு பழகிவந்தாள்; அதுகண்டு ஊரில் அலர் எழுந்தது: விசாகை மனம்நொந்து கந்திற்பாவைக் கோட்டத்திற்குச் சென்று முறையிட்டாள். அக்கந்திற்பாவை ஊரிலிருப்பாரை நோக்கி, "மாநிலத்தில் உள்ளவர்களே! இவள் பெய்யா மழையையும் பெய்விக்கும் ஆற்றல் படைத்த கற்புடையவள்'' என்று கூறி விசாகைமேல் உள்ள பழிச்சொல்லை நீக்கிக் காத்ததாம்'' என்பதே அச்செய்தி.

மைத்துன முறைமையால் யாழோர்
மணவினைக்கு
ஒத்தனர் என்றே ஊர்முழு தலரெழப்
புனையா ஓவியம் புறம்போந் தென்ன
மனையகம் நீங்கி, வாணுதல் விசாகை
உலக அறவியின் ஊடுசென் றேறி
இலகொளிக் கந்தின் எழுதிய பாவாய்!
உலகர் பெரும்பழி ஒழிப்பாய் நீயென
மாநகர் உள்ளீர் மழைதரும் இவளென
நாவுடைப் பாவை நங்கையை எடுத்தலும்''
[மணிமேகலை-சிறைசெய்காதை 86-94]

ஊரவர் கூறிய பழிச்சொல்லோ விசாகை தருமதத்தனோடு கந்தருவமணம் செய்துகொண்டாள் என்பதுதான். கன்னிப்பெண் ஒருத்திக்கு மழைவளந் தரூஉம் ஆற்றல் இல்லை என்பதும், ஆடவன் ஒருவனோடு கூடி அவனைத் தெய்வமாக வணங்கி வாழும் பெண்ணுக்கே அம்மழைவளந் தரூஉம் ஆற்றல் உண்டு என்பதும் 'பூணாகம் உறத்தழீஇப் போதந்தான் அகனகலம் வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி அருமழை தரவேண்

[தொடர்ச்சி 18-ஆம் பக்கம்]

# "குறள் நெறி"

புலவர் இரா. இளங்குமரன்

ஆலமரத்தடியில் ஒரு கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்தில் இருந்தவர்களுள் பலர் காவியுடையுடன் காணப்பட்டனர். சிலர் வெள்ளையுடையுடனும் இருந்தனர். என்றாலும் எல்லார் கைகளிலும் தவறாமல் திருவோடோ, சட்டியோ சுரைக்குடுக்கையோ இருந்தன. அவர்களின் கும்மாளம் ஆலமரப் பறவைகளின் ஆரவாரத்தையும் அடக்கிக்கொண்டிருந்தது. கூடியிருந்தவர்களுக்கு ஒரே ஓர் வேலைதான் உண்டு. 'ஊர் சுற்ற வேண்டியது; வீடுகளில் சோறு வாங்கவேண்டியது; உடல் கொழுக்க உண்ண வேண்டியது;' உழைப்பு மிக மிகச் சுருங்கிப்போயிற்று அல்லவா?

உடல் நோக உழைப்பது வியர்வை கொட்டுவது ஆகியவை அவர்களுக்கு இல்லை. ஏன் இல்லை? மானம் என்னும் ஒரு பொருள் அவர்களிடம் இல்லை. கால்கை இருந்தும், உடல் வலிமை இருந்தும், தான் உழைக்காது தன்னைப்போன்ற ஒருவனிடம் போய்க் கை நீட்டி "ஐயா, சோறு போடு; துணிகொடு; காசு தா" என்று கேட்டுத்திரிவது மானக்கேடு இல்லையா? போகவிடக்கூடாத மானத்தைப் போக்கி வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா? மானத்தை இழந்து இழந்து பழகிப்போன அவர்கள் மரத்துப் போன உள்ளங்களுக்குத் தோன்றுவது இல்லையே மானக்குறை! ஆனால் அப்படி மற்றவர்களுக்கும் தோன்றாது போய் விடுகின்றதா!

கூட்டம் கூடியிருந்த ஆலமரத்தடியை ஒருவர் அடைந்தார். அவர் அக்கூட்டத்தை நெருங்கிய உடனே அக்கூட்டத்தினரிடம் மகிழ்ச்சி காணப்பட்டது. "பிச்சைக்காரர்களுக்குச் சாப்பாடு போடுவது பெரும் புண்ணியம்." என்னும் கருத்து வளர்ந்துவிட்டது நம் நாடு அல்லவா!

அதனால் நம்மை அழைத்துக்கொண்டு போய்ச் சோறுபோடவே இப்பெரியார் வருகிறார் என்று எண்ணி மகிழ்ச்சியை ஓரளவு அடக்கிக்கொண்டு வந்தவரை நோக்கினர். தங்கள் உண்கலங்களையும் எடுத்து வைத்துக் கொண்டனர். ஓட்டப்பந்தயத்தில் பங்கெடுப்பவர் 'வீழ்க்கை' அடிப்பதை எப்படி எதிர் நோக்கி ஓடுதற்கு இருக்கிறார்களோ அப்படி இருந்தனர் இரவலர்.

பெரியவர் நெருங்கினார். அவர்கள் அத்துணைப்பேருக்கும் சேர்த்து ஒரு கும்பிடு போட்டார். உங்களை ஒரு செயலுக்காகத் தேடி வந்தேன். நீங்கள் அத்துணைப்பேர்களும் என் மீது இரக்கம் காட்டவேண்டும். அதுவும் இப்பொழுதே இந்த நொடியிலேயே இரக்கம் காட்டியாகவேண்டும். நான் கேட்கும் ஒன்றை நீங்கள் தருதல் வேண்டும்.

இரவலர்களில்சிலர் திகைப்படைந்தனர்;சிலர் தவிப்படைந்தனர். சிலர், பிறர் அறியாமல் அங்கிருந்து நழுவத்தொடங்கினர். வாய்த்துடிப்புள்ள ஒருவர் "ஊர் ஊராக இரந்து திரியும் எங்களிடம் வந்து இரக்கம் காட்ட வேண்டும்; நான் கேட்பதைக் கொடுக்கவேண்டும் என்கிறீர். இதுவரை இரவலர்களைத்தான் நாங்கள் கண்டிருக்கிறோம். இரவலர்களிடமும் இரந்து திரியும் இரவலர்களைக் கண்டதே இல்லை. நல்ல ஆள் நீர்!" என்று எள்ளி நகையாடினார். இதற்குள் சிலபேர்கள் தங்கள் திருவோடு, சுரைக்குடுக்கைகளை மறைத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டனர்.

"சரி! பெரியவரே! நீர் எங்களிடம் இரப்பது எது? அதைச்சொல்லும்!" என்று துணிச்சலான இன்னொருவர் கேட்டார்.

"இங்குள்ள அனைவரும் இரவலராக உள்ளீர்கள். இரப்பதை உங்கள் வாழ்க்கைப் பிழைப்பாகக் கொண்டு விட்டீர்கள். தம் சீர் சிறப்புக்களை இழந்து அடுத்தவர் வாயிலில் சென்று எமக்கு இது கொடு என்று தமக்கு இணையான அல்லது இணையும் இல்லாத ஒருவரிடம் இரந்து உயிர் வாழ்வது இழிவு இல்லையா?" என்றார் பெரியவர்.

"அது இருக்கட்டும்! நீர் எங்களுக்கு நல்லது சொல்ல வந்து விட்டீர்! நீர் உம் நிலைமையை எண்ணிப்பாரும். செல்வரிடம் இரக்கும் இழிவினும், இரப்பவனிடமே இரப்பது மிகவும் இழிவு இல்லையா? இடந்தெரிந்துகூட இரவல் தொழில் நடத்தத் தெரியாத நீர் எங்களுக்கு அறம் சொல்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது" என்று நத்தலாகப் பேசினார்.

"வாய்ப்பு இல்லாதவன் தான், இரப்பவனுக்கு இல்லை என்று சொல்வான் என்பது இல்லை. இருப்பவனும் கூட மனம் இல்லாத காரணத்தால், செல்வத்தின் மேலுள்ள பேராசையால் வைத்துக் கொண்டே இல்லை என்று

[தொடர்ச்சி 14ஆம் பக்கம்]

# காந்தியடிகள் பொது மொழியாக்கக் கருதியது இந்தியன்று

மே: சி. சிதம்பரனர்

“மகாத்மாசி, மக்களிடையே நாட்டுப் பற்றும் ஒற்றுமை வளர்ச்சியும் ஏற்படுவதற்கு ஒரு பொது மொழி அவசியமென்று கருதினர். ஆட்சிமொழியாகவிருந்த ஆங்கிலம் அந்நியரின் தாய்மொழியாகவும் நாட்டின் 2 விழுக்காடு மக்களே அதைக்கற்றிருந்தபடியாலும் அது பொது மொழியாக அமைய முடியாது என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவேதான் நாட்டில் மிக அதிகமான மக்கள் பேசும் இந்தியைத் தேசீயமொழியாகத் தேர்ந்தெடுத்து அதை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டுமென்று உபதேசம் செய்தார்.”

31-1-65 தலையங்கம் ஆனந்தவிகடன்.

இங்ஙனம் இந்தி வெறியர்கட்காதரவு தரும் வகையில் “காந்தியடிகளே கருதியது தான்” எனப் பலர் கூறுவதும் எழுதுவதும் உண்டு. ஆதலின் இதன் உண்மை வரலாறு காண்பாம். (“பெரும்பாலோர் பேசும் மொழி இந்தி என்பது உண்மைக்கு மாறுபட்டது” என்று குறள்நெறியில் முன்னர் வெளி வந்த கட்டுரையில் அரசியற் புள்ளி விவரங்களுடன் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுளது.)

## பிரிவினையான் முளைத்தது

ஆங்கிலவாட்சியிங்கு வேரூன்று முன் வட நாட்டில் ‘இந்தி என்று ஒரு மொழி இருப்பதாக யாருக்கும் தெரியாது. இன்றைய இந்தி வெறிப்போர் வீரர்களின் பாசறையாகவுள்ள ‘உத்தரப்பிரதேசத்’திலேயே இந்துத்தானி தான் அம்மாநில மொழியாக விருந்தது. அது அரபு, பாரசீக, உருது, மொழிக்கலப்பும், உருது எழுத்தும் கொண்டதாகவும், இந்து முசுலீம் என்ற இரு இனத்திற்கும் பொது மொழியாகவுமிருந்தது. பின்பு, இந்துக்கள் தங்கட்குத் தனி மொழிவேண்டுமென்ற கோரிக்கைக் கிணங்க ஆங்கில அரசு ‘கில்கிரைட்’ என்ற ஆங்கில அறிஞரிடம் இப்பணியை ஒப்படைத்தது. அவர், “வல்லுசி, சடல்மிசுரா என்ற இரு சமத்கிருதபண்டிதர்களைத் துணைக்கொண்டு இந்துத்தானியிலுள்ள கலப்புச்சொற்கட்குப் பதில்களாக மிகுதியும் சமத்கிருதச் சொற்களைச் சேர்த்தும், உருது எழுத்து வடிவைத் தேவநாகரி எழுத்து வடிவாக மாற்றியும், அதற்கு “இந்தி” எனப் பெயரமைத்தும் தந்தனர்.

(“1803-இல் ‘கில்கிரைட் என்பாரின் போதனையால், லல்லுசீவால் பிரேம்சாகர் என்ற நூல் எழுதப்பட்டது. அது, உருது, அரேபியா, பாரசீகம், சமத்கிருத முதலியன கலந்து கதம்பமாய்க் காட்டுமொழி போலிருந்தது. இதை ஐரோப்பியர் இந்தி என்றழைத்தனர். உரைநடை மட்டுமுண்டு. இலக்கியக் கவிதைகள், பீகார், பாய்சுவாரி, டிராச்வி மொழிகளிலிருந்தன” இது 1888இல், “வங்கம் ஆசிய சங்கவெளியீடு.” இதனை 5-5-56இல் இந்து இதழில், சார்சு, ஏ. கிரீயர்சன் வெளியிட்டுள்ளார்.)

## பிரிவினையால் வளர்ந்தது

இந்துத்தலைவர்கள் தங்கட்கெனத் தனி மொழியாக அமைத்துக்கொண்டுவிட்டபடியால் அன்றுதொட்டே அதன் வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாய்ப் பெரும்பாலோர் பேசப்படும் மொழியாக நாட்டுமக்களிடை மெய்ப்பித்துக் காட்டவும், வருங்காலத்தில் எல்லா மொழிகட்கும் மேலான உன்னத நிலையிலமைக்கவும் என்னென்ன செயல்கள் புரிய வேண்டுமோ அத்துணையும் செய்தனர், செய்கின்றனர்.

## பிரிவினையே விளைத்தது

உரிமைப் போராட்டக்காலத்தில் எதிர் காலத்தில் நாட்டிற்குச் செய்யவேண்டிய பணிகளை மலை மலையாக மக்கள் முன் எடுத்துக் காட்டிப் பேசி வந்ததில் அவ்வவ்மாநிலங்களில், அவரவர் பேசிவரும் மொழிகளிலேயே ஆட்சி நிலையங்கள் (கோர்ட்டுகள்) நடைபெறும். வழக்கறிஞர்கள் (வக்கீல்கள்) கூடத்தேவையில்லையென்றனரன்றி இந்தி மொழியாக வருமென்று ஒருசொற்கூட வெளிவரவில்லை. ஏன்? அன்றெல்லாம் ஆட்சிமொழிக்கொள்கை தலைவர்களிடையே கரந்து நிற்கும் குறிக்கோளாயிருந்தது.

திலகர் (1920) மறைவுக்குப்பின் காங்கிரசுத் தலைமை காந்தியடிகளை வந்தடைந்ததல்லவா? ஆதலின் நாடு தன்னுரிமையடைந்த பின் பொது மொழியாது? என்ற கருத்துத் தெரிவிக்குமாறு வேண்ட அவர் (காந்தியடிகள்) கூறியது. “வழக்காற்றிலுள்ள இந்துத்தானியையே பொது மொழியாகக் கொள்ளலாம். அதன் உருது எழுத்துடன் தேவநாகரி எழுத்தை வேண்டுமானலும் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்றனர். ஆனல் இக்கருத்தைக்காங்கிரசுச் செயற்குழு ஏற்கவில்லை.

அதிலிருந்து மொழி பற்றியகருத்துத் தெரிவிப்பதை நிறுத்திக்கொண்டனர் காந்தியடிகள்.

நேதாசிசுபாசு சந்திரபோசு "ஆங்கில எழுத்துக்கள் மூலம் ரோமன் லிபி இந்துத்தானியைப் பயன்படுத்தலாம்" என்று கூறினர் அதனைத்தமது "இந்திய தேசியப் படை" அலுவல்களில் நடத்தியும் காட்டினர். அதனையும் கா. செ. குழுவினர் ஏற்கவில்லை.

1935-இல் காந்தி இர்வின் உடன்படிக்கைப்படி மாநிலத் தன்னாட்சி வழங்கப்பட்டது. 1937-இல் தேர்தலில் காங்கிரசு வெற்றிபெற்றது. பதவியும் ஏற்றது. 30 மாதம் ஆட்சி நடைபெற்றது. ஆனால் எதிர்பார்த்தபடி நல்லாட்சி நடைபெறவில்லை. சட்டமன்றத்தில் சனநாயகம் ஓடி ஒழிந்தது. வகுப்புணர்வு, கட்சியுணர்வு வந்து நுழைந்தது. கட்டாய இந்தி புகுத்தப்பட்டது. எதிர்த்தோரையெல்லாம் சிறை சேர்க்கப்பட்டது. மறுத்த குற்றச் சீர்திருத்தச்சட்டமெல்லாம் தாராளமாய்ப்பயன்படுத்தப்பட்டது. தொழிலாளர் மீது பம்பாயில் துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. சுருங்கக்கூறின் அமைச்சர்களிடையே கரந்து நின்ற அனைத்துணர்வுகளும் வெளிப்பட்டன. இவ்வாட்சியின் மூலம் இந்து முசுலீம் பிணக்கு வெளிப்பட்டது.

"முசுலீம் லீக்" சின்ன தலைமைக்கு வந்ததல்லவா? அவரும் காங்கிரசுப் பற்றுளர்தான். இந்து முசுலீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டவர்தான். நாடு தன்னுரிமை பெற ஆர்வமுடையவர்தான். ஆனால் மனம் வேறுபட்டது. காங்கிரசிற் கலந்துகொள்ள மறுத்தது. இரண்டமைப்பும் ஒன்றித்துப்பாடுபட்ட உழைப்பெல்லாம் பாழாயின.

காங்கிரசு "இந்தி பொது மொழி" என்றது. லீக் "உருது பொது மொழி" என்றது. "வந்தே மாதரம்" பாடாதே. வார்தாக்கல்வி கூடாது. காங்கிரசுக்கொடியைப் பறக்கவிடாதே. என்றெல்லாம் 'லீக்' தொடங்கியது. காந்தியடிகள், "நாட்டில் ஒருவர் சொன்னாலும் கொடியைப்பறக்க விடாதே" எனக்கட்டளையிட்டார். அதனை "இந்துமகாசபை" "மதத்துக் காபத்து" என்றது. "காங்கிரசாட்சி இசுலாத்துக்குச்சனி" என்றது "லீக்"

இங்கிலையில் திடீரென்று ஐரோப்பியப் போர் (1939) மூண்டது. பிரிட்டன் இந்தியாவை உதவி கோரியது. காந்தியடிகளும் ஒருப்பட்டு அறிக்கை வெளியிட்டனர். ஆனால் கா. செயற்குழு அதை ஏற்காது "தூய தன்னாட்சிக்கு உறுதிமொழி பெறல் வேண்டும். அதுவரை அமைச்சர்களும் பதவிகளிலிருந்து நீங்க வேண்டும்." எனத் தீர்மானம் நிறைவேற்றியது. அதனால் மீண்டும்வெள்ளையரது நேரடியாட்சி நடைபெறலாயிற்று. அவ்வமயம்தான் இந்தி எதிர்ப்புக் கைதிகளைக் கண்டதும் "தேவநாகரியே ஆட்சி நடத்தும் இலக்கணம். ஒருமொழியைக் கட்டாயப்படுத்திப் படிக்கச்சொல்வதே தவறு. அதற்காகச் சிறையிற்றள்ளுவதா" எனக்கைகொட்டி நகையாடி ஆயிரக்கணக்கான கைதிகளை ஒரேநாளில்வெளியில் விட்டான் வெள்ளையதிகாரி.

1942 இல், "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் தோன்றியது. நாட்டில் மூர்க்கத்தனம் ஆங்காங்கு தலைவிரித்தாடியது. சுபாசு சந்திரபோசும் சப்பானுடன் சேர்ந்து போர் முயற்சியிலீடுபட்டதால் பிரிட்டனில் கலக்கமுண்டாகியது. அவ்வமயம், "ட்டாபர்ட் கிரிப்சை" சமாதானத்துக்காக இந்தியாவுக்கனுப்பினர். ஆனால் இங்கு இந்து முசுலீம் வேற்றுமை, பேச்சுக்குத் தடையாக நின்றது. பின் ஐரோப்பியப் போரும் முடிவுபெற்றது. பிரிட்டனிலும் முதலாளி ஆட்சி முடிந்து தொழிலாளராட்சியெழுந்தது,

1946-இல், இந்தியத்தேர்தலில் மீண்டும் காங்கிரசே வெற்றி பெற்றதால் பிரிட்டனிலுள்ள இந்தியமந்திரி "லாரன்சு, அலெக்சாண்டர், கிரிப்சு முதலானோர் இந்தியா போந்தனர். ஏதேதோ நடந்தும் பின்னர் 'லீக்குக்கு' நாட்டைப் பிரித்துக் கொடுத்து 1947 இல் பாக்கியுள்ள நாட்டிற்குத் தன்னாட்சியுரிமை பெற்றனர்.

"காங்கிரசு முதன்முறையாகப் பதவி ஏற்றதும் மொழிச் சிக்கலையும், வகுப்பு வாதத்தையும் ஒதுக்கி நாட்டின் வறுமை போக்க முனைந்திருப்பின் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும்"

திரு. வி. க. இந்தியாவும் விடுதலையும்

"நண்பர்கள், வழக்காற்றிலுள்ள மொழியை விடுத்து நாட்டை ஆரியமயமாக்க முனைந்துள்ளரென்பது வெளிப்படையாகத் தெரிகிறது"

காந்தியடிகள், அரிசனச் செய்தித்தாள்.

காந்தியடிகள் இந்தியைப் பொது மொழியாகக் கருதவில்லை யென்பதற்கு இச்செய்தி சான்றாகும்.

இனிமேலாவது இந்திவெறி தனது வரலாற்றுப்பணியைமேற்கொள்ளாது தடுத்தலும் நாட்டின் ஒற்றுமை காத்தலும் தலைவர்கள் கடனாம்.

★

# போடா, போ, போக்கற்ற புலவா....

அரசியன்பன்

போடாபோ போக்கற்ற புலவா! உன்றன்
புலமையும், திறமையும் யார்க்கு வேண்டும்?
பாடாகப் படுகின்ருய்! பழமை சான்ற
பண்டைய இலக்கியங்கள் புகழை எல்லாம்
வீடுதொறும் பரப்புதற்கு விரும்பு கின்ருய்!
விளக்கேற்றிக் குறள்பாக்கள் நாளும் நாளும்
பாடுதற்கு யார் இசைவார்? இதெல்லாம் சொன்னல்
பரிகசிப்பார் இன்றுள்ளோர்! பித்தன் என்பார்!

'விளைத்தெடுத்த தெள்ளமுதம்! மலைத்தேன்! இன்பம்!
விரவிவிடும் புதியமலர்!' என்பதாகத்
தலைச்சிறப்புக் காவியங்கள், கவிதை நூற்கள்
தனிச்சிறப்பு நம்மவர்க்குத் தேவை யில்லை!
களைப்படைந்த மனிதவுடல் வியர்வை போன்ற
காமக்குள நூற்களுக்கே மதிப்புத் தந்து
'வளைந்தவுடல்' வாழ்வினையே வேண்டி நிற்பர்!
வக்கற்ற பெரும்புலவா, உனக்கேன் தொல்லை?

அடித்தளத்தில் பழுதுள்ள மொழியைக் கொண்டோர்
அன்பின்றி வெறியோடு திணிப்ப தற்குத்
துடிக்கின்ருர்! படைபலத்தை உலவ விட்டுத்
துடிதுடிக்கச் சுடுகின்ருர்! உரிய வர்க்கோ
அடைத்தேனும் செந்தமிழைக் காப்ப தற்கு
அணுவளவு நல்லுணர்வும் இல்லை! இல்லை!
உடைந்துவிட்ட அணைக்கட்டாய்த் தமிழும் நாடும்
உருக்குலைந்து வாடுவதைத் தடுப்பார் இல்லை!

பிழைக்கின்ற வழிவிட்டுப் பிதற்றிக் கொண்டு
பித்தன்போல் நீமட்டும் கவலைப் பட்டு
வழிவிட்டுப் போகின்ற தமிழர் கூட்ட
வழிபற்றித் தமிழ்காத்து, நாட்டை ஓச்சும்
பிழைகொன்ற வாழ்நாளைத் திரும்ப வைக்கும்
பெரும்பணியில் உழல்கின்ருய்! உதவிக் கென்று
அழைக்கின்ருய் நல்லவரை! கொதிக்கும் நெஞ்சம்!
போடாபோ யோக்குயர்ந்த புலவா, நீயும்!

# வண்டமிழ்ப் பெருங்குடி மக்களே!

வணக்கம். கொந்தளிக்கும் கொடுங்கடல் கோடிக்கரை மக்களைத் தன் கொடு வயிற்றில் அடக்கிக்கொண்டது; ஆழிசூழ் இவ்வுலகு ஆறாத்துயரில் ஆழ்ந்துகிடக்கிறது. சுடுநெருப்பைத்தாங்கியுள்ள எரிமலை, குமுறிக்கொப்புளித்துத் தன்கனற் கைகளால் கணக்கற்றோரை அணைத்து அவித்துவிட்டது; உலகு துன்பத்தால் சூழப் பெற்றுக்கிடக்கிறது. காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டோடி எண்ணற்றோர் உயிரை மாய்த்துவிட்டது; மன்பதை மாளாத் துயரில் மண்டிக்கிடக்கிறது. காட்டுத் தீ பற்றிப் பரவிக்கனன்று அடவியை அழித்துவிட்டது; அழகின் அழிவை அவனி கண்டு, பெருமூச்சுவிடுகிறது.

இஃதென்னே! இஃதென்னே! என வியக்கின்றீர்கள். விளக்குவன்.

கொந்தளிக்கும் கடல்போல், குமுறும் எரிமலைபோல், கரைபுரண்ட காட்டாற்று வெள்ளம்போல், பற்றிப்பரவிய காட்டுத்தீபோல் **இந்தியப்பாதுகாப்புச்சட்டம், ஆன்று அவிந்தடங்கிய கொள்கைச்சான்றோராகிய இன்றமிழ்ப்பெரும் புலவர் இலக்குவப்பெருந்தகையை இத்திங்கள் இரண்டாம் நாள் தன் கொடுவலியால் பற்றி வன் சிறைக்கு அழைத்துச்சென்றிருக்கிறது.** வேலூர்ச் சிறையில் வண்டமிழ்ப்புலவர்! இதுதான் அறம் தழுவிய, நீதிகுன்றாத, நேர்மைச் செறிவுமிக்க சட்டம் நற்றமிழ்ப்புல்வர்க்கு நல்கிய நற்பரிசு. இச்செய்தி தமிழ்ப்பெருமக்களுக்குஒரு பேரிடி; தண்டமிழ்ப் புலவர்க்கு ஓரு பேரதிர்ச்சி; வண்டமிழ் மாணவ மணிகளுக்கு வரையற்ற கவலைக் குறி; ஆன்றோர்க்கும் சான்றோர்க்கும் ஆறாத துயர அடையாளம்; மக்களாட்சி மாண்பிற்கு மாறாத பெருங்களங்கம்.

கழிந்த திங்கள் இத்தம்பியின் கன்னித் தமிழ் மடல் நுங்கள் கைகளிலே தவழும்போது என் அருந்தமிழ்ப்பேராசிரியர், அன்னைமொழி காக்கும் அடலேறு, அஞ்சா நெஞ்சுடை அருந்தமிழ்க் குரிசில்; கொள்கைக்குன்று, நேர்மையின் நிலைக்களன், இன்றமிழ் காத்தல் எனும் இலக்குடை இலக்குவப் பெருந்தகை எங்களோடிருந்தார்; இன்று வண்டமிழ் வாழவேண்டும் என எண்ணியதற்காக வேலூர்ச்சிறை அவரை வரவேற்று வைத்திருக்கிறது. கலங்கிய கண்களோடும், கவலைகப்பிய உள்ளத்தோடும் இக்கடிதத்தை நுங்கட்கு வரைவதன் நோக்கம் நீங்கள் இன்று நிலவுகின்ற நீதியின் நிலையையும், நேர்மையின் போக்கையும்; அறத்தின் திறத்தையும் அறிந்துகொள்ளவேண்டுமென்பதேயாம்.

பர்துகாப்புச்சட்டம் நாட்டின் பாதுகாப்பை நலியச் செய்வோர் பாலும், தாய்நாட்டைக் காட்டிக் கொர்டுக்கும் இரண்டகக்காரர் மேலும், பயன்படுத்தப்படவேண்டிய ஒன்று. ஆனால் அஃதின்று "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் கொள்கை வழிவந்த தண்டமிழ்ப்புலவரை நாடிவந்திருக்கிறது; தேடிப் பிடித்திருக்கிறது. பாதுகாப்புச் சட்டப்படிச் சிறை செய்யுமளவிற்கு இப்பெருந்தகை செய்திட்ட குற்றம்தான் என்னை? என்பதுதான் விளங்காத புதிராக விடைகாண இயலாத வினாவாக நிற்கிறது. காரணம் காட்டாமல், தலைக்கீடே தெரிவிக்காமல் தகைசான்ற பெரியோரையும் சிறைப்படுத்தும் ஆற்றல் இச்சட்டம் கொண்டிருக்கின்ற பெருவலிபோலும். சட்டத்தின் வலிவு பற்றி எண்ணுவதை விடத் தமிழ் மக்கள் அச்சட்டம் பயன்படும் வேளைபற்றியும், அது பற்றும் ஆன்றோர் பற்றியும் எண்ண வேண்டுவது முறையும் கடனும் ஆகும்.

காடுபலகடந்து களைப்புற்றதின் காரணமாக, முரசு கட்டிலிலேயே படுத்துக் கண்ணயர்ந்து விட்ட பைந்தமிழ்ப்புலவர் மோசிகீரனாரைக் கண்டு, கன்னித்தமிழ் உறங்குகிறது என்றெண்ணிக் கடுஞ்சினம் விட்டுக் கவரி வீசித் தமிழ்த்தாய்க்குத் தலைவணங்கிய அரசன் அன்றையத் தமிழ் வேந்தன். **"தமிழ் உரிமை பெறவேண்டும்; தமிழகத்தில் தமிழே தலைமை ஏற்க வேண்டும்; தமிழகத்து மாணவர்கள் தமிழ் வழியாகவே அனைத்துக் கலைகளையும் கற்று ஆன்ற அறிவும் ஆள்வினையும் உடையோராகத்திகழ வழி செய்யவேண்டும்"** என்னும் குறிக்கோள்ஏந்திக் கடுங்கோடையையும் கருதாது ஐந்நூறு கல் நடந்து செந்தமிழ்ப்பெரு நகராம் சென்னையடைந்து, அமைச்சர்களைக்காண்பேன், ஆவன செய்யவேண்டுவேன்," என்று திட்டமிட்டுத் தமிழ்உரிமைப் பெருநடையணியொன்றை உருவாக்கிய தமிழ்ப் புலவர்க்குச் சிறைச்சாலையை நல்கிச் செந்தமிழ்த்தாயை வரவேற்கிறது இன்றைய அரசு. அரசினரின் இச்செயலை ஆய்ந்து பார்மின்! அறம் மிளிரவேண்டிய இடத்தில் மறம் கோலோச்சுவதையும் எண்ணிப் பார்மின்!

தமிழ்உரிமைப் பெருநடைச்செலவு தூய்மையும், தம்மை வருத்திக்கொள்வதின் தலைக்கீடாக நாட்குற்கு நன்மை விளைதல் வேண்டும் என்னும் தியாகத்தன்மையும் கொண்ட ஒரு நற்செலவு என்பதை ஏனோ அரசு உணர மறந்துவிட்டது. **அரசின் திட்டத்தைத் தலைமேற்கொண்டு நாட்டிடை அதனைப்பரப்பி அரசுக்கு வலிமை சேர்க்கும் அறச்செலவு** அஃது என்பதை

ஆராய்ந்து தெளியத் தவறிவிட்டது. தேர்ந்து தெளிந்திருப்பின் அரசு இந்நடைக்கு ஊக்க மூட்டி ஆக்கம் அளித்திருக்கும். வாய்ப்பினைப் பயன்படுத்தி இசைபெறவேண்டிய அரசு, மாருக உணர்ந்து அறத்திற்கு மாருகச்செயல் பட்டு, அழியா வசையும் வடுவும் ஏற்படுத்தி விட்டது என்பதைத் தமிழ்மக்கள் உணர்தல் வேண்டும். அறம் இன்று கறைபடிந்து காணப் படுகிறது. இக்கறை கரைந்து களங்கம் மறைந்து, மாசற்ற நல்லற ஒளியை நற்றமிழ் நாடு என்று பெறப்போகிறதோ?

'தமிழ் உரிமைப் பெருநடைச் செலவு' என்றதும் பல்வேறு எண்ணங்கள் நம் மனத் தகத்தே எழும். தென்புலத்து மக்கள், காசிக்கும், வடபுலத்தினர் கன்யாகுமரிக்கும் இறைப்பற்றின் காரணமாகச் செலவு (பயணம், யாத்திரை) மேற்கொள்கிருர்கள். அண்ணல்காந்தியடிகள் மேற்கொண்ட தண்டிச் செலவும், அறிஞர் மார்ட்டின் லூதர்கிங் அண்மையில் அமெரிக்கக்கண்டத்தில் நடாத்திய 'மன்பதை உரிமை நடைச்செலவும்' வரலாறு நமக்குக் காட்டுகின்ற பெருஞ்செலவு களாம். ஆனல் உலக வரலாற்றில் தாய்மொழி உரிமைக்காக 'ஒரு பெருநடை' நிகழ்ந்தது என்று நாம் காணல் அரிது. இத்திங்கள் மேற்கொள்ள இருந்த 'தமிழ் உரிமைப் பெருநடைச்செலவு' தான் தாய்மொழியுரிமை யொளியேந்திய, தாய்மொழிக்காப்பு எனும் தலையாய நோக்கம் கொண்ட விழுமிய பெருநடை என்ற எண்ணம் நுங்கள்பால் எழாமலிருக்காது. அமைதியான சூழலில் இந்நடை நிகழ இருந்தது என்பதையும் நீங்கள் எண்ணு மலிருக்க முடியாது. அறிவுசான்ற நல்லவர்கள் நிரம்பிய அவ்வணியின் அமைப்பாளர், வரலாற்றுச் சிறப்புமிக்க அவ்வணியை உருவாக்கிய வண்டமிழ்ப் பேராசிரியர் சிறை செய்யப்பட்டிருக்கிருர் என்பதும் நும் நினைவிற்கு வாராமலிருக்காது. நடை தடைப் படுத்தப்பட்டுள்ள இந்நேரத்தில், இந்நடையின் புனிதத்தன்மையையும், அந்நடைக்கு அளிக் கப்பட்டுள்ள பெருமையின் விரிவையும், தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நீங்கள் ஓர்ந்து பார்த்தல் வேண்டும்; தேர்ந்து தெளிதல் வேண்டும். நீதி ஒளிந்துகொண்டதா? அன்றி ஒழிக்கப் பட்டுவிட்டதா? என்பதையும் உணர்தல் வேண்டும்.

ஆள்வோரின் இத்தகைய அறங்கோடிய செயல் முறைகளை எண்ணுங்கால், இன்று பாராள்வோர் 'குறள்நெறி ஓங்கின் குடியர சோங்கும்' எனும் கொள்கை வழி நிற்கிருர் களில்லை என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. இன்றைய அரசு வள்ளுவர் காட்டுகின்ற:

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும் எனும்

தெரிந்து செயல்வகை முறையினையும்,

'கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு' எனும் அரசியல்

விழிப்புணர்வு நெறியினையும் பின்பற்றி ஒழுகல் வேண்டும்; குடிதழீஇக் கோலோச்சவேண்டும்; என்று நாம் இடித்துரைப்பது இன்றைய சூழலில் சால்புடைத்தாம்.

வள்ளுவப்பெருந்தகையின் அரசியல் நெறிகள் வழுவாது பின்பற்றப்படுமேயானல் குடியாட்சி முறை தழைக்கும்; குடியரசுநெறி ஓங்கும்; குவலயத்தில் ஒற்றுமை ஒளி மிளிரும் என்பதை என் அருமைத் தமிழ் மக்கள் எண்ணிடுவர்; அத்தகைய அறப் பேராட்சி பிறங்க உழைத்திடுவர்; என்று எண்ணி முடிக்கிறேன்.

தமிழன்பன்,
**வீ. முத்துச்சாமி**

---

"உயர்ந்த கருத்துக்களும், தூய்மையான ஒழுக்க விதிகளும், தூய்மையாக நினைப்பதும்' எழுதுவதும் இயற்கையில் காணக்கூடியனவே என்னும் உண்மையைத் தெரிவிக்க வல்லதாய் இருப்பதால் திருக்குறள் ஆர்வத்துடன் ஓதப் படும். இந்நூலாசிரியர் தாம் கூறவந்த அறிவுரைகளை அழுத்தந்திருத்தமாகச் செய்யுள் நடையிற் கூறுவதையொப்ப உள்ள மற்றெரு நூலை மக்களாய்ப்பிறந்தோர் பேசும் வேறெம் மொழியிலும் காணவியலாது"

மறைத்திரு. பர்சிவல்.

---

## கல்வியறிவு இல்லையானல்

1. பெரிய அவைகளின் முன் நின்று பேசுதல் முடியாது
2. பேசினலும் பிழைகள் மலியும்
3. கூர்மையான அறிவு பெற்றிருந்தானும், அறிவுடையார் மதிக்கும் நிலையில் இராது
4. பயன் அளியாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்
5. மிகுந்த அழகு பெற்றிருந்தானும், அசைவிலாப் பதுமை போன்றவரே
6. செல்வத்தால் துன்பமே உண்டாகும்
7. மாடமாளிகைகள் உடையவராயினும் எவரும் பெருமைப்படுத்தார்
8. விலங்குகளாகக் கருதப்படுவர்
9. கண்களிருந்தும் வெறும் புண்களே

—திருவள்ளுவர்.

### அரசுத்திட்டத்திற்கு ஆதரவு திரட்டவிருந்த

# பேராசிரியர் இலக்குவனரைக் கைது செய்ய என்ன நியாயம்?

### மதுரைக் கூட்டத்தில்

## தமிழக எதிர்க்கட்சித் துணைத் தலைவர்

# தமிழவேள் மு. கருணாநிதி கேள்வி



மதுரை மே, 3:

நேற்றைய தினம் பேராசிரியர் இலக்குவனரையும் பாதுகாப்புச் சட்டத்தின் கொடிய கரம் அணைத்துள்ளது. அவர் இப்போது வேலூர்ச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இது என்ன நியாயமோ தெரியவில்லை. அவர் என்ன தவறு செய்தார்? இந்த அரசை எதிர்த்துக் கிளர்ச்சியோ போராட்டமோ ஆரம்பிக்க யாரையாவது தூண்டினாரா? **கல்லூரிகளில் தமிழைப் பாட மொழியாக்க வேண்டுமென்பதும் தமிழைத் தமிழக ஆட்சிமொழியாக்க வேண்டுமென்பதும் சர்க்காரின் திட்டம். இந்தத் திட்டத்தை மக்களிடையே தீவிரப் பிரச்சாரம் செய்யும் வகையிலும்** மாணவர்களிடையே தமிழைப் பாட மொழி, யாக்க ஆதரவு திரட்டும் வகையிலும் மே 9-ம் தேதியன்று தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தார். அதற்கு முன்னரே இந்த அரசாங்கம் அவரைப் பாதுகாப்புக் கைதியாக்கிவிட்டது.

இந்தச் சர்க்காரின் திட்டத்திற்கு ஆதரவு திரட்டப் புறப்பட இருந்த அவரைக் காவல் கைதியாக்கியது என்ன நீதி?

உதாரணமாக மதுவிலக்குச் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்துள்ளது.

அதைத் தீவிரமாக்கப் பிரச்சாரம் செய்வதைப் போல இலக்குவனரும் அரசாங்கத் திட்டத்திற்குப் பிரச்சாரம் செய்ய இருந்தார்.

இப்போது ஆபாசச் சுவரொட்டி எதிர்ப்புச் சட்டம் இருக்கிறது. இருந்தபோதிலும் சர்வோதயச்சங்கத்தினர் ஆபாசச்சுவரொட்டியை அகற்றக் கோரி மறியல் நடத்தினர். அவர்களது குறிக்கோளை நான் தவறு என்று குறிப்பிடவில்லை. ஆனால் இந்த அரசு அவர்களைக் கைது செய்ததா! அப்படி இருக்க அரசாங்கத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டப் புறப்பட்ட ஒரு தமிழ்ப் பெருமகனைக் கைது செய்தது மட்டும் என்ன நியாயம்?

இந்த அரசாங்கத்திடம் அணுவளவாவது இரக்கம் என்பது இருக்குமானால் உடனே விடுதலை செய்யவேண்டும்.

'முரசொலி' 5—5—'65

# சென்னையில் கலைஞர்

சென்னை, மே 7.

"தமிழ்ப் பேராசிரியர் சி. இலக்குவனர் தமிழகத்தில் காங்கிரசுக் கட்சி தமிழை ஆட்சி மொழியாகச் செய்திருக்கும் ஏற்பாடுகளுக்கு ஆதரவாகவும், கல்லூரிப் பாட மொழியாக ஆக்குவதைத் தீவிரப்படுத்தவும் ஒரு மாத காலம் கால்நடையாகச் சென்று 50 புலவர்களுடன் அமைதியான முறையில் பிரச்சாரம் செய்ய இருந்தார். அவர் கைது செய்யப் பட்டிருப்பது ஆச்சரியமான ஒன்றாகும்"

'முரசொலி' 9-4-'65

# பாதுகாப்பும் பாராள்வோர் கடமையும்

பொன். தினகரன், எம். ஏ.,

பரத கண்டத்தின் பாதுகாப்பிற்கு ஊறு விளைக்கின்ற பகைவரின் செயல் ஆண்டிற்கு ஆண்டு வளர்ந்து வருகிறதேயல்லாமல் ஓய்ந்து ஒழிவதைக் காணேம். அசாம், குசராத் நாட்டு எல்லைகளில் பாகிஃச்தான் படையினர் அண்மையில் புதிதாக ஊடுருவியிருப்பதும், மேலும் படைகள் குவிக்கப்படுவதும் பெரிதும் கவலை தருவன. இந்நிலையில் மக்களின் ஒருமித்த ஆற்றல் ஊறுபடாது பார்த்துக்கொள்வது ஆட்சியாளரின் இன்றியமையாக் கடமையாகும். மக்களாட்சி முறையில் பல்வேறு கட்சிகள் இருப்பதும் அக்கட்சிகளைச்சார்ந்த மக்கள் தமக்குள் வேறுபட்டு நிற்பதும் இயல்பே. எனினும் இவ்வேறுபாடு நாட்டு நலம், பாதுகாப்பு இவை தொடர்பான அடிப்படை நோக்கம் பற்றியதன்று. அவற்றை எய்தும் முறைபற்றியதே.

பரதகண்டத்தின் ஒற்றுமையை வளர்ப்பதற்கு வழி ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகக் கொள்வதே என்று சிலரும், இந்தியை ஆட்சி மொழியாகக்கொள்வதே என்று வேறுசிலரும், அன்று அன்று 14 மொழிகளையும் ஒத்த உரிமை கொண்ட ஆட்சி மொழிகளாகக் கொள்வதே என்று இன்னும் சிலரும் கருத்துக்கொள்கின்றனர். எனினும் அவர் அனைவர்க்கும் அடிப்படை நோக்கம் பரதகண்டத்தின் ஒற்றுமையே அன்றி வேறின்று என்பது வெள்ளிடைமலை. இவ்வாறே கூட்டுச் சேராக் கொள்கையை வலியுறுத்துவோரும் கூட்டுச் சேரும் கொள்கையை வலியுறுத்துவோரும் நாடு பாதுகாக்கப்படவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தில் வேறுபட்டவரல்லர்.

எனவே இங்குள்ள கட்சிகள் அனைத்தும் நாட்டு நலத்திலும் பாதுகாப்பிலும் ஒத்த நாட்டங்கொண்டவை, என்பதை ஆட்சியாளர் உணரவேண்டும். பரதகண்டத்தைப் பகைவர்க்குக் காட்டிக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்ட கட்சி ஏதும் இயங்குமானல் அதனைப் பொதுமக்களே ஒழித்துக்கட்டுவர். நாட்டைக் காட்டிக்கொடுக்கின்ற கயவர் சிலர் எந்நாட்டிலும் இருப்பரேனும் அவர் கரந்த செயலினராய், தம்முகவரி தெரியாவாறு மறைந்து வாழ்வர். அவர்சிலவேளை கட்சிசார்ந்திருக்கவும்கூடும் அக்கயவரைக் கண்டு பிடித்து அவரால் நாட்டிற்கு நேரவிருக்கும் தீங்கினைத் தடுப்பதற்கே இந்தியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

ஆனல் எதிர்க்கட்சிகளை ஒடுக்குதற்கும் தமக்கொவ்வாத சான்றோர்களை வதைத்தற்கும் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவது வேதனை தருவது, கண்டிக்கத்தக்கது. எதிரிகளை ஒடுக்குதற்கே அல்லாமல் எதிர்க்கட்சிகளை வேரறுத்தற்கன்று இச்சட்டம். ஆட்சியாளர் ஒரு கல்லில் இருமாங்கனி பெற விழைவரேல் இரண்டும் இழந்துநிற்க நேரும். இன்றைய சூழ்நிலையில் கடுமொழியும் கையிகந்த தண்டமுமே மக்களின் ஒருமித்த ஆற்றலை உடைத்து, பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்குமெனின் நல்லதே நாடும் நல்லவர்கள், குற்றம் கனவிலும் கருதாச்சான்றோர்கள் தண்டிக்கப்படுவரேல் விளைவு என்னகும் என்று சொல்ல வேண்டுவதின்று.

கடுமொழியும் கையிகந்த தண்டமும் களைந்து வெருவந்த செய்யாது நாட்டுப்பாதுகாப்பை வலுப்படுத்த ஆட்சியாளரை வேண்டுகிறோம்.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்"

குறள்

---

## பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனர் அவர்களை உடனே விடுதலை செய்க.

### தமிழ்க்காப்புக் கழக வேண்டுகோள்.

தமிழ்க்காப்புக்கழகச் செயற்குழுக்கூட்டம் 4-5-'65 அன்று கழகத்துணைத்தலைவர் திரு. பொன். தினகரன் எம்.ஏ., அவர்கள் தலைமையில் கூடிக்கீழ்க்கண்ட முடிபுகளை நிறைவேற்றியது.

1. பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனர் அவர்களைக் காரணமின்றி இந்தியப்பாதுகாப்புச்சட்டப்படிச் சிறை செய்தமையை இக்கூட்டம் மிகவன்மையாகக்கண்டிக்கிறது.

2. எவ்வித அரசியல் தொடர்பும் அற்ற பேராசிரியர் அவர்களை உடனே விடுதலை செய்யுமாறு தமிழக அரசை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

# பக்தவத்சலனார் ஆட்சி பதிலளிக்க வேண்டும்

சிலம்புச்செல்வர்



மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்
துறைத் தலைவர் திரு. இலக்குவனாரைப் பாது
காப்புக் கைதியாகச் சிறையிலடைத்திருக்
கிறது தமிழக ஆட்சி. அவர் 9-5-65 ஞாயி
றன்று "தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம்
துவங்கி, மதுரையிலிருந்து சென்னைவரை நடந்து
வரப்போவதாக அறிவித்திருந்தார். அந்தப்
பெருநடைப் பயணத்தின் குறிக்கோள் இந்
தியை எதிர்ப்பதன்று. கல்லூரிகளில்தமிழைப்
பயிற்சி மொழியாக்க வேண்டுமென்னும்
கோரிக்கைக்குத்தமிழ் மக்களுடைய ஆதரவைத்
திரட்டவே இந்தப் பயணத்தை மேற்கொள்ள
இருந்தார். அதனைத் துவக்கிவைத்து வாழ்த்
துக் கூறுமாறு என்னை அழைத்திருந்தார்.

மே 9-ந் தேதியன்று சென்னையில் மத்திய செயற்குழுக் கூட்டமிருந்ததால் அவருடைய அழைப்பை ஏற்க இயலவில்லை. ஆயினும், கடித மூலம் வாழ்த்து வழங்கியிருந்தேன்.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சிமொழி யாக்குவதற்கு ஆதரவு தருமாறு மக்களைக் கோருவது சட்ட விரோதமா? **பாரதத்தின் பாது காப்புக்கு எதிரானதா! பக்தவத்சலனார் ஆட்சி பதிலளிக்க வேண்டும்.** அடக்குமுறைக்கும் ஒரு எல்லை உண்டு. பக்தவத்சலனார் எல்லை கடந்து அடக்கு முறையைக் கையாள்கிறார்.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சிமொழி யாக்கவேண்டும் என்ற கொள்கையை, கொள்கை அளவில் பக்தவத்சலனாரும் ஏற்கி றார். மாணவர்கள் தமிழைப் பயிற்சிமொழி யாக ஏற்க முன்வரவில்லை எனக்கூறிவருகிறார். இந்தக் குறையகல, தமிழ் பயிற்சிமொழியா வதற்கு ஆதரவு தருமாறு மக்களிடம் பிரச் சாரம் செய்ய ஒரு பேராசிரியர் பயணப்பட் டால் **அவரைப் பக்தவத்சலனார் பாராட்டியிருக்க வேண்டும்.** மாறாக பாதுகாப்புக் கைதியாகச் சிறையிலடைத்திருக்கிறார். இது தகாது. தரும மாகாது. விரைவில் அவரை விடுதலை செய்ய ஆட்சி முன்வரவேண்டும்.

ம. பொ. சிவஞானம்
தலைவர், தமிழரசுக் கழகம்.

செங்கோல் (தமிழரசுக் கழக ஏடு) 9-5-'65

## பேராசிரியர் இலக்குவனாரை விடுதலை செய்யத் தமிழரசுக் கழக வேண்டுகோள்

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதென்ற தமிழக அரசின் கொள்
கைக்குப் பொது மக்களுடைய அக்கறையையும், ஆதரவையும் திரட்டித்தருவதற்காகப்
பேராசிரியர் இலக்குவனார் மேற்கொள்ளவிருந்த பிரச்சாரப் பயணத்தைத்
தடுத்துப்பாதுகாப்புச் சட்டத்தின்படி அவரைச் சிறையிலடைத்துள்ள அரசினரின் வன்
செயலானது தமிழ்மொழியின் வளர்ச்சியில், அரசினருக்கு இருப்பதாகக் கூறப்படும்
நல்லெண்ணத்தைச் சந்தேகிக்கும்படி செய்வதாக இருக்கிறது. ஆகவே அவரை உடனடியாக
விடுதலை செய்யுமாறு தமிழக அரசினரைக் கேட்டுக்கொள்கிறது என்று 9-5-'65இல் கூடிய
தமிழரசுக் கழகச் செயற்குழு முடிவெடுத்துள்ளது.

# காங்கிரசார் ஆட்சியில் காந்தீயத்துக்குச் சிறை!

## இலக்குவனர் கைது! மனிதஉரிமைக்குச் சோதனை! தமிழ் கைது செய்யப்பட்டிருக்கிறது.

பேராசிரியர் சி. இலக்குவனர் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த இருதிங்களுக்கு முன்பு அவரைச் சிறையிலிட்டார்கள்பிறகுவிடுவித்தார்கள். அப்போது ஆட்சித் தரப்பிலிருந்து தக்க காரணம் கூறப்படவில்லை. இப்போதும் காரணம் எதையும் அறிவிக்காமலே கைது செய்யப்பட்டிருக்கிறார். பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும்போது காரணத்தை அறிவிக்க வேண்டிய அவசியமில்லை, என்றாலும்—ஒரு எல்லை இருக்கிறது. யார்யார்மீது பாதுகாப்புச் சட்டம் பாயவேண்டும் என்பதில் ஒரு வரை முறை இருக்கிறது.

பேராசிரியர் இலக்குவனர் மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற செய்தி ஆட்சியாளர்களுக்கு வேண்டுமானால் அலட்சியமானதாக இருக்கலாம். ஆனால் மாணவர் வட்டாரத்தில் பற்றி எரியும் நெருப்பாகிறது. தமிழ்ப் புலவர்கள் வட்டாரத்தில் ஒரு பயங்கரப் பேரிடியாகிறது. அரசியல் வட்டாரத்தில் ஒரு அதிர்ச்சியாகிறது. தமிழக மக்களுக்கு ஒரு குழப்ப மேற்படுகிறது.

நாடறிந்தவரை—இலக்குவனர் மிகப் பெரிய தவறு எதையும் செய்பவராகவோ—செய்தவராகவோ தெரியவில்லை. பாகித்தான் அதிபர் அயுப்கானோடு தொடர்பு கொண்டதாகவும் தெரியவில்லை. இந்தியப் பாதுகாப்புக்கு ஊறுதேடும் நோக்கத்தில் உள்நாட்டுச் சதியில் ஈடுபட்டதாகவும் தெரியவில்லை.

தெரிந்ததெல்லாம் ஒன்றுதான். பிறந்த மண்ணுக்கு பெருமை தர நினைத்தார். பேசும் மொழிக்கு உரிமை வேண்டும் என்றார். எங்கிருந்தோ வரும் இந்தி, ஆதிக்க நோக்கத்தில் நுழைவதா? அதை நாம் அனுமதிப்பதா?—என்று புலவர்கள் வட்டாரத்தில் ஒரு புயலை எழுப்பினார்.

இந்த நேரத்தில் மீண்டும் அவர் சிறைக் கம்பிகளுக்கிடையே அடைக்கப்பட்டிருக்கிறார். ஏன்?—பக்தவத்சலம் வாய் திறக்கமாட்டார். இந்தியை எதிர்ப்பதற்காகத்தான் பாதுகாப்புச் சட்டமென்றால்—பக்தவத்சலம் இராணுவ உடை அணிந்துகொண்டு நான் ஒரு சர்வாதிகாரி என்பதை முதலில் அறிவிக்கவேண்டும். தமிழகமெங்கும் கால் நடைச் சுற்றுலா செய்ய விரும்பியது தவறு என்றால்—இந்திய அரசு பயங்கர நிலைக்குத் தனது உருவத்தை மாற்றிக்கொண்டுவிட்டது என்று பொருள்.

கால்நடை யாத்திரை சட்டப்படி தவறல்லவே? காந்தியார் உப்பு வரியை எதிர்த்துத் தண்டி யாத்திரை செய்தார். அதன் வழிமுறைக்காக அல்ல; அதன் சட்ட மீறலுக்காகத்தான் வெள்ளையர்கள் அவர்மீது நடவடிக்கை எடுத்தார்கள். இதுகூடவேண்டாம். சில மாதத்துக்கு முன்பு அமெரிக்காவில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. எம். சி. எம். நிறுவனத்தார் அதைச் செய்திப் படமாக எடுத்து உலகெங்கும் பரப்பினர். கருப்பர்களின் உரிமைக்குப் போராடும் மார்ட்டின் லூதர் கிங் "மார்ச்டு அலபாமா" (அலபாமா யாத்திரை) என்று ஒரு இயக்கம் நடத்தினர். அலபாமா நகருக்குக் கால்நடையாகவே சென்று கறுப்பர் பிரச்சினைக்குப் போராடுவது யாத்திரையின் நோக்கம். ஏறத்தாழ இலக்குவனரின் கால் நடை யாத்திரை போலவேதான் அதுவும், அதற்கு அமெரிக்க அரசாங்கம் உரிமை தந்தது. இங்கு பக்தவத்சலம் அரசு உரிமை தரவில்லை. கைது செய்திருக்கிறது.

சனநாயகம் என்ன வழியில் கையாளப்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டுமட்டுமல்லபண்பட்டு வரும் மனிதஉரிமை யுகத்தில் நாம் எங்கே தள்ளப்படுகிறோம் என்பதற்கும் இது ஒரு சாட்சி. தண்டி யாத்திரையைப் போலவே அலபாமா யாத்திரை செய்கிறேன் இது அறவழி—நல்வழி என்றார் லூதர்கிங். அமெரிக்க அரசு ஒத்துக்கொண்டது. இலக்குவனர் அதையேதான் சொன்னார். காந்தி வழியில் யாத்திரை செய்யப்போகிறேன் என்றார். அதற்காகத் தான்முயன்றுவந்தார். அதற்காகத்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

எனவே கைது செய்யப்பட்டது இலக்குவனரல்ல — காந்தி வழி! காந்தியே கைது செய்யப்பட்டிருக்கிறார். மனித உணர்வும், அதன் உரிமையும் கைது செய்யப்பட்டிருக்கிறது!

[மாலைமணி தி.மு.கழக ஏடு, 16—5—65]

[4-ஆம் பக்கத்தொடர்ச்சி]

# குறள் நெறி..........

சொல்லுவான். பழித்தும் பேசுவான். மேலும் கேட்டுக்கொண்டு நின்றால் கழுத்தைப் பிடித்தும் வெளியே தள்ளுவான். அதனால் நீங்கள் நினைப்பது போல் உள்ளவனிடம் இரப்பதும் இழிவேதான். அவன் இல்லை என்று கூறுவதும் உண்மையேதான்! அவ்வாறு இருக்க உங்கள் செயல் எவ்வாறு உயர்ந்தது ஆய்விடும்?" விளக்கம் தந்தார் பெரியவர்.

"இரவலர்களாகிய எங்களிடம் இரப்பதற்கும், புரவலர்களாகிய செல்வர்களிடம் இரப்பதற்கும் வேறுபாடு இல்லை என்கிறீர். அது இருக்கட்டும். நீர் எங்களிடம் வேண்டி வந்தது என்ன?" என்று கேட்டார் முதிய இரவலர் ஒருவர்.

நான் உங்களிடம் என்ன கேட்கப்போகின்றேன். பிறரிடம் இரப்பது இழிவு என்பது என் கொள்கை. இழிவுடைய இரப்பை ஒருவன் செய்தாலும் செய்யலாம் — கேட்டது கேட்ட அளவில் உவப்புடன், மானம் குறையாத விதத்தில் கிடைப்பதாக இருந்தால்! ஆனால், உங்களிடம் ஒன்றைக்கேட்டுப்பெற முடியுமா என்ற திகைப்பே இப்பொழுது உண்டாகின்றது. நீங்கள் சொல்லும் விளக்கம் இருக்கிறதே அது மேலும், என்னைத் தளரச் செய்கிறது."

"இது என்ன ஐயா! நீரே ஓடி தேடி வந்தீர். சொல்லாமல் இப்பொழுது கதை வளர்க்கிறீர். எங்களால் முடியுமானால் உறுதியாகக் கொடுக்கிறோம்." என்றார் என்ன வென்று அறியும் ஆவல் உடைய ஒருவர். அது பலருக்கு முணுமுணுப்பை உண்டாக்கியது, இனி, என்ன கேட்டு விடுவாரோ என்று.

பெரியவர் சொன்னார்; "உங்களிடம் இரப்பது ஒன்றே ஒன்று. அந்த ஒன்றும் எனக்காக இல்லை. உங்கள் மானத்திற்காக - மனித இனப் பெருமைக்காக!" ஐயா! இதனைக்கொடு "என்று எவரிடத்தும் போய்எதையாவது எப்பொழுதாவது இரந்து திரிய வேண்டா. இந்த ஒன்றையே உங்களிடம் யான் இரக்கின்றேன். சிலர் நினைக்கிறீர்கள் இரந்தால் என்ன என்று நீங்கள் செல்வர்கள் என்றும், வள்ளல்கள் என்றும் எண்ணிப்போய் இரப்பவர்கள், உயர்ந்தபண்பு உடையவர்கள் அல்லர். சிலர் கொடுக்கலாம்; பலர் கொடுப்பது இல்லை. கொடுக்கும் பலரும் — பலமுறை தேடி அலுத்தபின் 'கால்கூலி' தருவது போல் தரவே செய்வர். இன்னும் சிலரோ 'மானத்திரை'யைக் கிழித்து வீசி எறிவர். ஆதலால் அவர்தரும் எளிய பொருளை எண்ணி அருங்கலமாம் மானத்தை இழக்கக்கூடாது. உயர்ந்த மனிதப் பண்பை இழந்து விடக்கூடாது. போய்வரும் புன்பொருளைக் கருதிப், போனால் வாராத மானத்தை இழந்து விடுவது அறிவின்மை அனைத்திலும் தலைமையான அறிவின்மைஆகும். "நீங்கள் இரந்து திரியவேண்டா என்பதே நான் உங்களிடம் இரப்பது என்றார். கூட்டத்தில் அமைதி நிலவியது. கேள்வி கேட்டவர்களும் வாயடைத்துப் போயினர். வந்த பெரியவர் தம் கருத்தை அவர்களுக்கு இரண்டு வரியில் சொன்னார்;

இரப்பன் இரப்பாரை யெல்லாம்; இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

பாட்டை மனப்பாடம் செய்து கொண்டனர். பொருள் விளக்கமும் தெரிந்துகொண்டனர். ஆனால் சிலரால்தான் இரப்புப் பாத்திரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு உழைக்க முடிந்தது. பலர், பழகிப்போன — மானம் இழந்து மரத்துப்போன — பரம்பரை இரவலராக இருந்தனர். அவர்களுக்கும், தங்களுடன் இருந்த சிலர் திருவோட்டைத் தூக்கி எறிந்துவிட்டு உழைக்க இறங்கிய செயல், மின்னற் கீற்றுப்போல் பாய்ந்து உணர்ச்சியை ஊட்டியது, என்றாலும் அந்த உறுதிப்பாட்டில் நிலைத்து விட்டார்கள் அல்லர்; சில நாட்களில் உணர்ச்சி எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது போல் இருக்கிறது. திருவோட்டிலேயே மீண்டும் அடைக்கலமாகிவிட்டனர். மானத்தினும் உயிர் வாழ்வே உயர்ந்தது என்பவர்களிடம் உறுதிப்பாட்டை — உயர்ந்த குறிக்கோள்களை — எதிர்பார்க்க முடியுமா? எல்லாரும் மானமுள்ள இரவலர்களாக இருப்பவர்களானால், அந்தக் கூட்டம் இவ்வளவு பெருகிக்கொண்டே போகுமா? 'பிச்சை' நாகரிக உலகில் ஒரு கலையாகப் போய்விட்டது என்பது கூட உண்மைதான்! உழைப்புக்கு மதிப்புக் குறைந்த நாட்டில் — காலத்தில் — உழையாத சோம்பர்க்கும் — இரவலர்க்கும் திண்ணை தூங்கிகளுக்கும் மதிப்பு இருந்தே தீரும். தராசின் ஒரு தட்டுத் தாழ்ந்தால் இன்னொரு தட்டு உயராமல் என்ன செய்யும்? **உழைப்புக்குப் பெருமை தரும் உலகிலே இரப்பது பெருங்குற்றமாகக் கருதப்படும். கருதப்பட வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.** அதனை நயமாகக்

[தொடர்ச்சி 20ஆம் பக்கம்]

# சாதல் நன்று

அ. சாந்திதேவி

## தமிழ் மகனே

எம்மைநத்து வாயென்று எதிரி கோடி
இட்டழைத்து மயக்கிடினும் வேண்டேன் என்று
நம்முன்னோர் அறம்போற்றி வாழ்ந்த நாட்டில்
நாதியற்று பிறமொழியின் தாள்கள் தாங்கி
நம்மினத்தார் சிலபேர்கள் கொள்கை யற்று
நாடிப்போய்ப் பதவியிலே ஒட்டிக் கொண்டு
நம்மினத்தை வேரறுக்கும் கொடுமை தன்னை
நசுக்கிடாத தமிழாநீ சாதல் நன்று.

## தமிழ் மகளே

அறத்தினையே அடியோடு வீழ்த்தி விட்டு
அந்நியரின் மொழிஇன்று நாட்டை ஆள
மறநெறியில் கொல்லைவழி புகுந்த காட்சி
மனத்தினிலே வேலாகப் புகுந்து இன்று
மறவாத துன்பத்தை அளிக்கும் வேளை
மாண்புமிக்க தமிழகத்து வீரப் பெண்ணே
முறத்தாலே புலியதனைத் துரத்தி வாழ்ந்த
முதுபுகழை இழந்தாய்நீ சாதல் நன்று.

## தமிழ் நாடே

புகழ்ந்தார்கள் மாநிலத்தின் உயர்ந்த மக்கள்
புவியினிலே சிறந்தநாடு தமிழ்நா டென்று
அகழ்ந்தார்கள் தமிழ்மண்ணே உனது நெஞ்சை
அடுக்காத சுடுமொழியால் சழக்கர் இன்று,
இகழ்ந்துரைத்துத் தமிழகத்தை ஆட்சி செய்ய
இன்னுமொரு மொழியதனை அழைத்து வந்தார்
தகர்த்தவரை அழித்திடாது தாங்கி நிற்கும்
தமிழ்நிலமே இனிமேல்நீ சாதல் நன்று.

## தமிழ்ப் பகையீர்

பெற்றதாயை அடகுவைக்கும் அடாத போக்கு
பெரியவராய்ப் பேரெடுத்த கொடிய புல்லர்
கற்றதையே மறந்துதானே புரிகின் றீரே
கரும்பினையும் கசக்கவைக்கும் தமிழாம் தாய்க்கு
மற்றமொழி வந்துபுக வழிகள் செய்து
மாசுநல்கும் கொடியோரே மண்ணில் நீவிர்
பற்றோடு தன்னலத்தால் ஏய்த்து இன்று
பழிசூழ வாழ்வதினும் சாதல் நன்று.

# தமிழால் முடியும்

முத்தரசு

தமிழ்நாட்டுக் கலைக்கல்லூரிகளில் பயிற்சி மொழி தமிழாக இருக்கவேண்டும் என்ற கேள்வி இன்று நேற்று எழுப்பப்பட்டதல்ல. ஐம்பதாண்டுகட்கு முன்பாகவே புட்டிப்பால் விடுத்துத்தாய்ப்பால் அருந்த வேண்டுமென்ற வேட்கை பிறந்துவிட்டது. அந்த வேட்கை தற்காலத்தில் பெருவேட்கையாக உருவெடுத்துள்ளது.

நாடு விடுதலைபெற்றுப்பதினேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் அடிமை எண்ணம் மாறவில்லை. ஆங்கிலப் பற்றுக்குறையவில்லை. ஆங்கிலம் வேண்டும்; ஆனால் அனைத்திலும் ஆங்கிலம் கூடாது. அதிலும் கல்வித் தொடர்பானவற்றில் ஆங்கிலத்தால் நன்மை விளையவில்லை. இந்நிலை நீடித்தால் தற்போதுள்ள மொழிப்பற்றுக்கூட மறைந்துபோகும். ஏற்படும் மாற்றங்கள் இன்னின்ன என்று அறுதியிட்டுக் கூறவே முடியாதுபோகும்.

கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று கூப்பாடு போட்டுக் குமுறுகிறார்கள். ஆனால் அதன் காரணத்தை அறிய மட்டும் மறுக்கிறார்கள். எடுத்துக் கூறினும் செவிமடுக்க அவர்க்கு மனமில்லை. உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புவரை தமிழிலேயே மாணவர்கள் அறிவியலைப் பயில்கிறார்கள். புகுமுக வகுப்புக்கு வந்ததும் அறிவியலைத் திடீரென்று ஆங்கிலத்தில் பயில்கிறார்கள். இது எங்ஙனம் இயலும்? புகுமுக வகுப்புக்கு வந்ததும் மாணவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறவே காலம் காணாதுபோகிறது. இந்நிலையில் பொருளை யாங்கனம் அம்மொழியில் கற்க இயலும்? மாணவர்கள் மீது ஒருசிறிதும் தவறில்லை. பயிற்சிமொழி ஆங்கிலமாக இருப்பதால்தான் இந்நிலை.

வேற்றுமொழியில் அறிவியலைக் கற்கவேண்டுமாயின் முதற்கண் அம்மொழியைக் கற்கவே தனிக்கவனம் கொள்ளவேண்டும். அம்மொழியில் நல்ல தேர்ச்சிபெற்று அதன் பின் பொருளைக் கற்பினும் தாய்மொழியில் கற்பது போல் சிறப்பாகக் கற்க இயலாது. ஆதலால்தான் தமிழகக் கல்லூரிகளில் பயிற்சிமொழி தமிழாக மாறவேண்டும் என்று தமிழ் மக்கள் முழக்கமிடுகிறார்கள்.

உலகத்தில் எங்ஙனும் நடைபெறாத புது முறை ஒன்று வேண்டும் என்று தமிழர்கள் வாதாடவில்லை, உலகம் எவ்வழிச் செல்கிறதோ அவ்வழியே செல்லத்தான் உண்மைத் தமிழர்கள் துடிக்கின்றார்கள். உரிமைபெற்ற நாடுகளில் அங்குள்ள தாய்மொழியே கல்லூரிகளில் பயிற்சிமொழியாக உள்ளது. பிரான்சு நாட்டில் பிரெஞ்சு மொழியே பயிற்சி மொழி. சப்பானில் சப்பானியமொழியே பயிற்சிமொழி. சப்பானிய உயர்நிலைப்பள்ளிகளில் விருப்பப் பாடமாகவும் கல்லூரிகளில் கட்டாயப் பாடமாகவும் ஆங்கிலம் போதிக்கப்படுகிறது. மேற்குச்செர்மனியிலும் செர்மன் மொழியே பயிற்சிமொழி. உருசியாவில் பன்மொழிபேசும் மக்கள் வாழ்கின்றனர். அங்கு அவரவர் மொழிகளே அதாவது வட்டார மொழிகளே பயிற்சிமொழி. சுவீடனிலும் சுவீடிசு மொழியே பயிற்சிமொழி. பல நாடுகள் இங்ஙனம் தாய் மொழியைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பீடுநடை போடுங்கால் நாமும் ஏன் சீரிய அம்முறையைப் பின்பற்றலாகாது. அறிவியலில் முன்னேறியுள்ள உருசியா வட்டாரமொழிகளைப் பயிற்சி மொழிகளாகக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அறிவியல் முதலானவற்றைத் தமிழில் போதிக்க இயலாது எனச் சிலர் போலித்தனமாகக் கூறிவருகிறார்கள். உருசிய மொழிகளைவிட நல்ல வளப்பமுள்ள சீரிய செம்மையான உயர்தனிச் செம்மொழியான தமிழால் முடியாது எனின் வேறு எம்மொழியாலும் முடியாது என்பது தேற்றம். அறிவிலார் கூற்றுக்களைத் தள்ளுக. அன்னை மொழியின் அடிமை விலங்கை ஒடிப்போம். கன்னித்தமிழைக் கல்லூரிகளில் கமழச் செய்வோம்.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள அனைத்துங் கலைக் கல்லூரிகளிலும் ஆங்கிலம் இற்றைஞான்று பயிற்சிமொழியாக இல்லை. அதேபோல்தான் தமிழகக் கல்லூரிகளும் செயல்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் 12 ஆண்டுகளாக இந்திமொழி பயிற்சிமொழியாக உள்ளது. மற்றும் இந்தியாவில் 38 பல்கலைக் கழகங்கள் தேசீய மொழிகளைப் பயிற்சிமொழியாக்கி உள்ளது. ஆனால் தமிழகத்தில் அடிமை எண்ணம்மாறவில்லை. ஆங்கிலவேட்கை தணியவில்லை என்ற பழையபல்லவியைத்தான் பாடவேண்டியுள்ளது. தமிழால் முடியும் என்பதற்குச் சான்று உள்ளது. 1953ல், பள்ளி ஆசிரியர்களாக இருந்து இடைநிலைத்தேர்வு எழுதுவோருக்குத் தமிழில் விடையெழுத அனுமதிக்கப்பட்டது. பாடப் புத்தகங்களும் வினாத்தாள்களும் ஆங்கிலத்தில் இருந்ததால் இச்சோதனை தோல்வியுறும் என்று பல்கலைக் கழகத்தார் மனப்பால் குடித்து மகிழ்ந்தனர். ஆனால் தமிழில் தேர்வு எழுதியோர் ஆங்கிலத்தில் எழுதியோரைவிட எண்ணிக்கையிலும்

தரத்திலும் அதிகமாகவே வெற்றிபெற்றனர். தமிழால் முடியும் என்று தெரிந்ததும் பல்கலைக் கழகத்தார் இம்முறையினைக் கைவிட்டனர். தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் இயங்குகின்ற பல்கலைக் கழகத்தாரின் பரந்த உள்ளம்தான் என்னே!

தமிழ் பயிற்சிமொழியாக வரவேண்டாம் என்போர் பல கேள்விக் கணைகளைத் தொடுப்பார்கள். அக்கணைகளில் ஒன்று பயிற்சிமொழி தமிழானல் பாடநூல்களுக்கு எங்கே போவது? உண்பதற்கு ஆட்கள் இருப்பின் உணவு விடுதி தானே தோன்ருதா? 1937ல், உயர்நிலைப் பள்ளிகளில் இனிமேல் தமிழே பயிற்சிமொழி என அமைச்சரவை அறிவித்ததும் உடனே பாடநூல்கள் பல துறைகளிலும் வெளியாயினவே. காந்தியடிகள் தாய்மொழிப் பயிற்சியைக் குறித்துப் பின்வருமாறு கூறுகிருர்: 'நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் நம்நாட்டுச்சிறுவர் சிறுமிகளுக்குவேற்றுமொழியில் பாடம் கற்பிப்பதை உடனே நிறுத்த உத்தரவிடுவேன். இக்கூற்றுக்கு ஆசிரியர்கள் மறுப்புக்கூறின் அவர்கள் உடனே அலுவலிலிருந்து நீக்கப்படுவார்கள். பாடநூற்கள் வெளிவரும்வரை காத்திருக்க மாட்டேன். பயிற்சிமொழி மாறினல்தானே நூற்கள் வெளிவரும்''. தாய்மொழிப் பயிற்சி பற்றி இங்ஙனங் கூறிய காந்தியடிகள் ஆங்கிலக்கல்வியின் தீமை குறித்துப் பின் வருமாறு கூறுகிருர். ''காசி இந்துப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் என்னிடம் பேசுங்கால் 'ஆங்கிலத்தில் மாணவர்கள் பொருளைக் கற்பதால் ஆருண்டு காலத்தை வீணக்குகிருர்கள்' என்று கூறினர்கள். அவர்கள் கூற்றை ஏற்றுக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவியரின் எண்ணிக்கையைக் கணக்கிடுங்கால் எத்தனை ஆண்டுகள் நம் நாட்டுக்கு நட்டம் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இதுகாறும் பயிற்சிமொழி ஆங்கிலமாக இருந்து வந்ததால் எண்ணற்ற கேடுகளைக்கண்டிருக்கிறேம். ஆங்கிலக்கல்வியால் சிந்தனையும் பகுத்தறிவும் அகன்று உருவேற்றி ஒப்புவிக்கும் தன்மை கைவந்திருக்கிறது. வேற்றுமொழி நோக்கினல் தாய்மொழியாகிய தமிழில் இலக்கியம் வளரவில்லை. தமிழில் அறிவியல் நூல்கள் எழவில்லை. ஆங்கிலத்தில் பயின்றவர்கள் ஆங்கிலத்திலேயே எழுதத் தலைப்பட்டமையால் தமிழ் வடிகட்டப்பட்டது. மாணவர்கள் ஆங்கிலக்கல்வியால் சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளையாக மாறிவிட்டார்கள். நம்நாட்டுக்கலை, இலக்கியம், பண்பாடு ஆகிய அனைத்தும் ஆங்கிலக்கல்வி படித்த இளைஞர்க்கு மூடநம்பிக்கைகளாகக் காட்சி அளித்தன. இந்நிலை நீடித்தால் தென் பொதிகைத் தீந் தமிழுக்கு ஆபத்து. அது தவிர்க்கப்படவே தமிழேபயிற்சி மொழியாக வேண்டும் என்று முழக்கமிடப்படுகிறது.

ஆங்கிலத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தமிழில் எங்ஙனம் போதிக்க இயலும் என்று சிலர் முணுமுணுப்பது நம் செவிப்பறைகளில் மோதுகிறது. இக்கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்பதை நடுநிலையினின்றே ஆயவேண்டும். கல்லூரிகளில் ஆங்கிலத்தில் படித்தவர்களே உயர்நிலைப் பள்ளிகளில் தமிழில் பாடம் போதிக்கிருர்கள். அவர்கள் நன்முறையில்தானே மாணவர்களுக்குப் போதிக்கிருர்கள். அதுபோன்று கல்லூரிகளும் செயல்படட்டுமே. பெரியமாறுதலை விரும்பும்போது சிறிய துன்பங்களைத் தாங்கிக் கொண்டால் குடியா மூழ்கிவிடும்,

''பைந்தமிழ் பயிற்சிமொழியாக வந்து விட்டால் பிறமொழி ஆராய்ச்சிகளை நம்மால் அறிய இயலாது. பிறநாட்டு ஆய்வுகளை நாம் எங்ஙனம் தெரிந்துகொள்ள இயலும்? தாய்மொழிப் பயிற்சியால் உலகத்தொடர்பற்று கிணற்றுத் தவளைகளாகி விடுவோம்'' என்று சிலர் வறட்டுப்பேச்சுப் பேசுகின்றனர். அவர்கள் பலவற்றைச் சிந்திக்க மறந்துவிட்டார்கள். ஐக்கிய நாடுகள் சபையில் பொதுமொழி என்று ஒன்று கிடையாது. பிரெஞ்சு, சீனம், ஆங்கிலம் போன்ற பலமொழிகளில் பேசலாம், அப்பேச்சை உடன் கேட்க மொழிபெயர்ப்பு வசதி உண்டு. உருசியாவில் வெளி நாட்டிலிருந்து வரும் ஆய்வுக் குறிப்புக்களை உடனே உருசிய மொழியில் மொழி பெயர்க்கிருர்கள் என்பதை மறந்துவிடலாகாது. நம்நாட்டில் பல மொழி கற்றவர்களைக் கொண்டு பிற ஆய்வுகளைத் தமிழில் மொழி பெயர்க்க இயலும். அமெரிக்காவிலும் உருசியாவிலும் உள்ள அறிவியல் வளர்ச்சியில் ''எலெக்ட்ரானிக்'' கணக்கிடும் இயந்திரங்கள் மொழி பெயர்க்கும் காலம் அண்மையில் வந்தே தீரும். ஒன்றினைச் செய்து முடிக்கத் திறனை விட ஆர்வமே இன்றியமையாது தேவைப்படுகிறது.

தமிழ் பயிற்சிமொழியாக வேண்டுமென்று முழக்கம் இடுபவர்கள் தங்களை இருமுனைப் போராட்டத்திற்கு ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்றற்போலக் கல்லூரிகளில் காலப்போக்கில் இந்தியைப் பயிற்சிமொழியாக்க நடுவணரசு திட்டம் தீட்டுகிறது மறைமுகமாக. நாடெங்கிலும் பல்கலைக்கழக மட்டத்தில் இந்தியே பயிற்சி மொழியாக்கப்படல் வேண்டும்என்று பீகார்அமைச்சர் என்.சின்கா கூறியுள்ளர். கல்விச் சீரமைப்புப் பற்றிப்

[தொடர்ச்சி 20ஆம் பக்கம்]

[3-ஆம் பக்கத்தொடர்ச்சி]

# கற்பும் பொற்பும்............

டின் தருகிற்கும் பெருமையவளே'' என்ற பாடல் மூலம் முன்பே விளக்கப்பட்டன. கந்திற் பாவையோ விசாகைக்கு மழைவளம் தரும் ஆற்றல் உண்டு என்பதை ஒப்புக்கொள்வதன் மூலம் அவள் கன்னித்தன்மை கெட்டுக் கற்புடையவள் ஆனுள் என்று உறுதி கூறுகிறது. அஃது உண்மையாயின் விசாகை கன்னித் தன்மை கெட்டாள் என்று ஊரவர் கூறும் பழிச் சொல்லைத் தெய்வம் நீக்கிவிட்டதாகச் சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று விளங்கவில்லை.

இனி, ஈண்டு நாம் கூறுகின்ற கற்பு என்ற சொல்லுக்கு நேரடியானபொருள் யாது என்று அறியல்வேண்டும். பெரும்புலவரான திருவள்ளுவர் ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள; கற்பென்னும் திண்மையுண் டாகப் பெறின்'' என்ற குறட்பாவால் கற்பு என்ற சொல்லுக்குத் திண்மை, அஃதாவது கலங்காமை அல்லது உறுதிப்பாடு என்று பொருள் கூறுசிறுர்; உறுதிப்பாடாவது தன் கணவனை மட்டுமே தெய்வமாகக் கருதி வணங்கிப் பிற தெய்வம் தொழாத உறுதிப்பாடு, தன் கணவனை அன்றிப் பிற ஆடவரை உள்ளத்தாலும் தீண்டாத உறுதிப்பாடு என்று கொள்ளுதல் வேண்டும். இந்தப் பொருள் பெரும்பாலும் மிகச் சரியானதே! எனினும், இப்பொருளைவிடக் கற்பு என்ற சொல்லுக்கு அன்பு எனப்பொருள் கூறின் மிகவும் பொருந்தும். ஏனெனில், மேற்கூறிய உறுதிப்பாட்டிற்கும் தலைவன்மேல் உள்ள அன்பே அடிப்படைக் காரணமாக இருக்கிறது. தலைவன்மேல் அன்பில்லார் அவனைத் தெய்வமாகக் கருதி வணங்க முடியாதல்லவா. அது மட்டுமன்றிக் கற்புடைப் பெண்டிர் தலைக்கற்புடையார், இடைக்கற்புடையார், கடைக் கற்புடையார் என மூன்று வகையினராகப் பாகுபாடு செய்யப்படுவதற்கும் அவர் தங்கள் கணவர்மேல் தாங்கள் கொண்டுள்ள அன்பே அடிப்படை அளவுகோலாகக் கொள்ளப்படுகிறது. மேற்கூறிய முத்திறக் கற்பினரும் தத்தம் கணவனைத் தெய்வமாகக் கருதி வணங்குவோரே; பிறதெய்வம் தொழாதவரே! ஆதலின் கற்பு என்பதற்கு உறுதிப்பாடு என்று பொருள்கொள்ளின் கற்புடைப் பெண்டிரை மூன்று வகையினராகப் பாகுபாடு செய்வது இயலாமற்போகும்.

கணவன் மாண்டதும் உடன் மாய்வோர் தலைக்கற்புடையவர் என்றும், மாண்ட கணவன் உடலைச் சுடுகாட்டில் கொண்டுபோய்ச் சுடுமளவும் உயிர் தாங்கியிருந்து கணவனுடலைச் சுட்டெரிக்கும் ஈமத் தீயினுள் குளிர்ந்த தாமரைப் பொய்கையில் நுழைந்து நீராடுவார்போல் புகுந்து மாள்வோர் இடைக்கற்புடையர் என்றும், கணவன் மாண்டபின்னும் உயிர் தாங்கியிருந்து கைம்மை நோன்பு நோற்போர் கடைக்கற்புடையவர் என்றும் கூறப்படுகின்றனர். கணவர்மேல் மிகுந்த அன்புடையோர், அவர் மாண்டதறிந்ததும் அந்த அதிர்ச்சியால் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனேடு அவன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டும் ஒருங்கு மாய்ந்ததுபோல உடனே மாள்வர் ஆதலின் அன்னேர் தலைக் கற்புடையார் என்று கூறப்படுகின்றனர். அந்த அளவுக்கு உயர்பேரன்பு இல்லாதவர் கணவர் இறந்ததுகேட்டும் உயிர்வைத்திருப்பர். எனினும் கணவரின்றி உலகில் வாழ முடியாது என்பதை நன்குணர்ந்து, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் மனைவிபோல ஈமத் தீயில் புகுந்து மாள்வர். ஆதலின் இன்னேர் இடைக்கற்புடையர்என்று கூறப்படுகின்றனர். அவரினும் குறைந்த அன்புடையாரே கணவர் இறந்த பின்னும் நோன்புநோற்று உயிர்வாழ வல்லவர் ஆவர். ஆதலின் அவர் கடைக்கற்புடையார் என்று கூறப்படுகின்றனர். கடைக் கற்புடையாரும் தலைவன்மாட்டு மிக்க அன்புடையவரே; எனினும் தலைக்கற்புடையார். இடைக்கற்புடையார் ஆகியோரை நோக்கக்கணவர்மாட்டுக் குறைந்த அன்புடையவரேயாவர். ஆதலின் தலைக்கற்பு, இடைக்கற்பு கடைக்கற்பு என்று பெயர் கூறப்படுவனவற்றைத்தலையன்பு, இடையன்பு, கடையன்புஎன்று கூறினும் பொருந்தும். ஒருவேளை தாய்தந்தையர் தம் மக்களிடமும், அண்ணன் தம்பியிடமும் காட்டும் அன்பினின்றும், தலைவி தலைவன்பால்

காட்டும் அன்பை வேறுபடுத்திக் காட்ட வேண்டி ஆன்றோர் அவ்வன்பிற்குக் கற்பு என வேறு பெயரிட்டனரோ என்று கருதவேண்டியுள்ளது.

கற்பு அறக்கற்பு மறக்கற்பு என இரண்டு வகைப்படும் எனவும் கண்ணகி மறக்கற்புடையவள் எனவும், பாண்டியன் நெடுஞ்செழியன் மனைவி அறக்கற்புடையவள் எனவும் அடியார்க்கு நல்லார் கூறுவர்.

இக்காலத்துத் தம்மைக் கற்புடையோர் என்று கூறிக்கொள்ளும் பெண்டிரை மூன்று வகையினராகக் கூறலாம். உள்ளத்தில் பிற ஆடவரை விரும்பிப் புணர்ந்தும், வாய்ப்புக் கிட்டாத காரணத்தாலோ அச்சத்தாலோ உடலளவில் தூய்மையாக இருப்போர் ஒரு வகையினர். ஏழைக் கணவரைப்பெற்ற பெண்டிர் சிலர், செல்வவசதி படைத்த செல்வர் வீட்டுப் பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி 'உனக்கு வாழ்க்கைப்பட்டதற்கு, நான் அவனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாலும் நல்லபடியாய் இருப்பேன்' என்று தம் கணவரிடமே கூறுகின்றனர். இன்னோரைக் கற்புடையவர் என்று சொல்லவே நாக்கூசுகிறது. இரண்டாவது வகையினர் தம் உடலால் மட்டுமன்றி உள்ளத்தாலும் பிற ஆடவரைத் தீண்டாதவர். பெரும்பான்மையினரான தமிழகத்துப் பெண்டிர் இவ்வகையினரே!

மூன்றாவது வகையினர் தம் நெஞ்சில் பிற ஆடவர்க்கு இடம் தராதது மட்டுமன்றிப் பிற ஆடவர் நெஞ்சிலும் தாம் புகாதவர். தம்மை மனைவியாக அடையவேண்டும் என்று பிறர் கருதின் அவர் நெஞ்சைச் சுட்டுப் பொசுக்கவும் வல்லவர் அவர், 'மண்டினி ஞாலத்து மழை வளம் தரூஉம் பெண்டிர்'எனவும், 'பிறர்நெஞ்சு புகாதவர்' எனவும், 'பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியர்' எனவும் மணிமேகலை கூறுவது இத்தகைய கற்புச் செல்வியரையே! இத்தன்மையான தலைசான்ற கற்புடையவர் பத்துப்பேராவது தமிழ்நாட்டில் இருப்பது அரிது. இத்தகைய பெண்டிர்தொகை பெருகப் பெருக நம்நாடு நாடாக ஆகும். ஆதலின் இத்தகைய அறச் செல்வியர் பெருகும் வகையில் சான்றோர் நாட்டில் பண்பாட்டை வளர்ப்பாராகுக.

பொற்பு என்ற சொல்லுக்கு அழகு என்பது பொருள். விலைமகளிர் ஆடை அணிகலன்களாலும், ஒப்பனையாலும் ஆடவர் கண்ணுக்குத் தாங்கள் பேரழகுடையோர்போல் காட்டிக் கொள்வர். எனினும், சில ஆண்டுகளிலேயே நோய்வாய்ப்பட்டு உடலழகு குன்றிப்போவர். ஆனால் கற்புடைப் பெண்டிரோ எளிமையும் இனிமையும் உடையராய், குறைவான ஒப்பனைகளோடு என்றும் மாறா இயற்கை எழிலோடு விளங்குவர். விலைமகளிர் எத்தனைக் கோடிப் பொன்னும் மணியும் உடையராயினும், அவர் நெஞ்சில் என்றும் அமைதி தவழாது; அவரை யாரும் கேலி பேசுவர்; எவருமே அவரை மதியார். அவர் வாழ்க்கையின் இழி நிலைமையினை

"மேலோர் ஆயினும் கீழோர் ஆயினும்
பால்வகை தெரிந்த பகுதியோர் ஆயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்"

(காடுகாண் காதை. 180–183)

எனச் சிலம்பு பேசும். கற்புடைப்பெண்டிர் கந்தையே உடுத்திக் கூழையே உண்ணும் ஏழ்மை உடையவராய் இருப்பினும் அவரை எல்லாரும் போற்றுவர்; பாராட்டுவர்; வணங்குவர். அவர் நெஞ்சில் எப்போதும் அமைதி குடிகொண்டிருக்கும். விலைமகளிர் பெருகப் பெருக நாட்டில் பண்பாடும் நாகரிகமும் குன்றி நாடும் காடாகும். கற்புடைப் பெண்டிர் பெருகப் பெருகக் காடும் நாடாகும். கற்புடைப்பெண்டிர் வாழும் நாட்டில் மழை தப்பாது பெய்யுமென்றும், வளங்குன்றாமல் கொழிக்குமென்றும், அரசனது ஆட்சி செங்கோலாட்சியாக் விளங்கும் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"வானம் பொய்யாது; வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"

(சிலம்பு அடைக்கலக்காதை. 145-147)

நாட்டில் வாழும் மக்களும், நாடாளும் வேந்தனும் மட்டுமன்றி விண்ணுலக வேந்தனாகிய இந்திரன் முதலான தேவர்களும் பத்தினிப் பெண்டிரை வணங்குவர் என்றால் அவர்தம் சிறப்புக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

இதுகாறும் கூறியவற்றால் தமிழகம் வளர்த்துக்கொண்ட பண்புகளில் தலையாயது கற்பொழுக்கம் என்பதும், கற்புடைப்பெண்டிர் கணவனை அன்றிப் பிற தெய்வம் தொழார் என்பதும், கன்னிப் பெண்கள் தங்களுக்கு நல்ல கணவர் கிட்டவேண்டித் தெய்வந் தொழலுண்டு என்பதும், ஆடவன் ஒருவனோடு தொடர்புகொண்ட பின்பே கன்னிப் பெண்களுக்குக் கற்புண்டாகிறது என்பதும், கற்பு என்ற சொல்லுக்கு அன்பு என்பது பொருளென்பதும், கற்புடைப்பெண்டிர் தலைக்கற்புடையார், இடைக்கற்புடையார், கடைக்கற்புடையார் என மூவகைப்படுவர் என்பதும், கற்பை அறக்கற்பு மறக்கற்பு என இரண்டு வகையாகப் பாகுபாடு செய்வதும் உண்டு என்பதும், கற்புடைப்பெண்டிரே விலைமகளிரினும் பேரழகு உடையவர் என்பதும், அவர் சிறப்புச் சுடுகாட்டையும் வளநாடாக்கவல்லது என்பதும் நன்கு விளக்கப்பட்டன.

★

# ஏனிந்த நடவடிக்கை?

தமிழ் அறிஞரும், குறள்நெறி இதழின் ஆசிரியருமான டாக்டர். சி. இலக்குவனார் மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

முன்பொரு தடவை கைது செய்யப்பட்டதும், பிறகு பொறுப்பில் விடுதலை செய்யப்பட்டதும் தெரிந்ததே! இப்போது பாதுகாப்புச்சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இப்போது அவர் கைது செய்யப்பட்டதற்கு எந்தவித நியாயமும் கிடையாது. எந்த விதக் குற்றச்சாட்டும் இல்லாது திடீர் திடீரென்று யாரையும் கைது செய்கின்ற வழக்கத்தை அரசாங்கம் இப்போது வைத்துக் கொண்டிருக்கிறது.

அயல்நாட்டு உளவாளிகளையும், ஐந்தாம் படையினரையும், ஆதரவாளர்களையும் கண்டு பிடித்துத் தண்டிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட பாதுகாப்புச்சட்டத்தை உள்நாட்டில் தமக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் சிறையிலடைப்பதற்கு ஆளுங்கட்சியினர் பயன்படுத்துவதாகத் தெரிகிறது.

இலக்குவனாரை முன்பு மாணவர்களை இந்தி எதிர்ப்புப்போராட்டத்திற்குத் தூண்டி விட்டதாகக் கைது செய்தார்கள், இப்போது அவர் என்ன செய்தார்? தமிழ்நாட்டில் எல்லாக் கல்வி நிலையங்களிலும் தமிழையே போதனா மொழியாக்க வேண்டும் என்பதற்காகச் சென்னையை நோக்கித் தமிழ்ப் பெருநடைப் பயணம் தொடங்க இருந்தாரே அதற்காகக் கைது செய்தார்களா?

அதற்காகத்தானென்றால், தமிழைக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்க — சகல துறைகளிலும் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று கோருவது எப்படிக் குற்றமாகும்? தமிழை ஆட்சிமொழியாக்கி விட்டோம் என்று ஆட்சியினரே கூறிவருகிறார்களே! அதைத்தானே விரைவாக நடத்தும் படியும், அதற்கு மக்களிடையே ஆதரவு தேடிடவும் தானே இலக்குவனார் பெருநடைப் பயணத்தைத் தொடங்க இருந்தார்! நல்லன செய்யப் புறப்பட்ட அந்த நல்லவரை திடீரெனச் சிறையிலடைத்திருப்பது குறித்து வருந்துகிறோம். அரசின் இவ்வறமற்ற செயலைக் கண்டிக்கிறோம்.

"கோ"

**தமிழ்க்கொடி** [நாம் தமிழர் இயக்க ஏடு]
தலையங்கம் 9—5—'65

---

[14ஆம் பக்கத்தொடர்ச்சி]

## குறள் நெறி..........

கூறினார். நயமாகக் கூறுகிறார் எனக்கண்டு கொண்டது நாடு. ஆனால், மானத்தின் சட்டம் – ஆணிவேர் – அது எனக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. கொண்டு வராத அளவும் ஆன்றோர் உரைமணிகள் இலக்கியமாக இருக்குமே ஒழிய, வாழ்வாக மலர முடியாது.

> இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
> கரப்பார் இரவன்மின் என்று.

"இரவலர்களையெல்லாம் யான் இரந்து ஒன்று வேண்டுகின்றேன்; நீங்கள் ஒருவரிடம் போய் ஒன்றை இரப்பீர்கள் ஆனால் அவர்கள் அதைக் கொடாமல் மறைத்து விடுகிறார்கள். ஆதலால் எந்த ஒன்றையும் எவரிடமும் எப்பொழுதேனும் இரக்கவேண்டா"

[17ஆம் பக்கத்தொடர்ச்சி]

## தமிழால் முடியும்......

பீகார் மக்கள்குழு நடத்திய கருத்தரங்கில் சின்கா இவ்வாறு கூறியுள்ளார். மேலும் பல்கலைக் கழகப் பயிற்சிமொழியாக வட்டார மொழிகள் வருவதை எதிர்க்கிறேன் என்று அவர் கூறியுள்ளார். மொழிவெறி பிடித்தலைவோர் கூறும் கூற்றுக்களுக்குச்செவிமடுக்காது ஏற்ற பணியினைச் செவ்வனே செய்வதே கடமை.

பல்முறைகேட்ட பொய்யை நம்புவது எளிதாக இருக்கும். ஆனால் ஒருமுறை கூட கேட்டறியாத உண்மையை நம்புவது கடினமாகத்தான் இருக்கும். அதற்கு மனப்பக்குவமும் தேவை. அதை நாமே உருவாக்கிக்கொள்ளல் வேண்டும். அப்போதுதான் தென்னன் பொருப்பிலே பிறந்து சங்கத்து இருப்பிலே வளர்ந்த இன்பத்தமிழ் கல்லூரிகளுக்குள் நுழையும். அந்த இனிய பொற்காலம், சங்ககாலத்திருப்பம் தூரத்திலில்லை. இதோ சேய்மையிலேயே உள்ளது.

-0-

வெளியிடுபவரும் அச்சிடுபவரும் டாக்டர். சி. இலக்குவனார். அச்சிட்டது: குறள்நெறி அச்சகம்
திருப்பரங்குன்றம், மதுரை-5. தொலைபேசி எண்: திருநகர் 65